2.06.2024 ம.சா.1 அருணாசலம் Mcop 230 of 2022

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்திற்கு முன்பு நான் ரைஸ்மில்லில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு தினமும் ரு.800/-சம்பளம் கிடைக்கும். விபத்து அன்று நான் இருசக்கர வாகனத்தின் சென்றேன். என் மனுவில் நான் லோடுமேனாக வேலை செய்து மாதம் ரூ.18ஆயிரம் சம்பளம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் ரைஸ்மில்லில் லோடு மேனாக வேலை செய்தேன். மழைகாலங்களில் ரைஸ்மில்லில் வேலை இருக்காது என்றால் வேலை குறைவாக இருக்கும். நான் மனுவிற்காக என் வேலை, வருமானத்தை மிகைப்படுத்தி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. விபத்து அன்று நான் ஒட்டி சென்ற இருச்ககர வாகனம் எனக்கு சொந்தமானது தான். விபத்து நடந்த சமயத்தில் என் மீது மோதிய காருக்கு 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யவில்லை என்றால் காப்பீடு இருந்தது. விபத்து நடந்தது 4.12.2021 என்றால் சரிதான். டி.என்.76.எப்.2991 என்ற காருக்குரிய பாலிசி 27.7.2021ல் முடிவடைந்து விட்டது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி காரின் உரிமையாளருக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயம் 2ம் எதிர்மனுதாருக்கும் 3ம் எதிர்மனுதாருக்கும் எவ்வித செல்லதக்க ஒப்பந்தம் இல்லாததால் எனக்கு 1,2 எதிர்மனுதாரர்கள் மட்டுமே தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. விபத்து சமயம் நான் ஒட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்திடமும் நான் இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தில் ஏற்பட்ட காயம் குணமாகிவிட்டது என்றால் உள்காயம் உள்ளது. வலி உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாக ஒட்டி சென்று எதிரே வந்த

காரின் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரும் பொறுப்பு அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயம் முறையான காப்பீடு இல்லாததால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.